# ஆத்ம ஜோதி.



ஸ்ரீ சாயி பாபா.

## பொருளடக்கம்.


| | விஷயம் | | பக்கம் |
|---|---|---|---|
| 1 | ஸ்ரீ ஸாயியின் மகிமை | S. K. N. | 353 |
| 2 | ஸ்ரீ ஸாயிநாதன் தரிசனம் | ,, | 354 |
| 3 | சொல்லும் செயலும் | ஆசிரியர் | 355 |
| 4 | ஆத்மீக வெடிகுண்டு | ஸ்ரீ சுவாமி சிவானந்தர் | 368 |
| 5 | ஸ்ரீ ஸாயிபாபாவின் ஜீவிய சரித்திரம் | ஸ்ரீ எஸ்.கே.என். ஐயர் | 361 |
| 6 | குரல் | சாது ஸ்ரீ முருகதாஸ் | 369 |
| 7 | ஸ்ரீ சாயிபாபாவின் பொன்மொழிகள் | | 374 |
| 8 | தொழுவார் தங்கள் துயர் தீர்ப்பாய் | பிரமசாரி சோமசுந்தரம் | 375 |
| 9 | இறைவனுள்ள இடம் | திரு. ச. மு. பிள்ளை | 378 |
| 10 | ஆத்மசித்திக்கான சாதனங்கள் | ஸ்ரீ சுந்தரம்மாள் ராகவச்சாரி | 381 |
| 11 | செய்தித்திரட்டு | | 383 |





# ஆத்ம ஜோதி.

(ஓர் ஆத்மீக மாத வெளியீடு)

சந்தா விபரம்.

ஆயுள் சந்தா ரூ. 75/- வருடச்சந்தா ரூ. 3/-
தனிப்பிரதி சதம் 30.

"ஆத்ம ஜோதி" நிலையம்,
நாவலப்பிட்டி, (சிலோன்)



ஓம்.

# ஆத்ம ஜோதி,

"எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவனே
எல்லா உடலும் இறைவன் ஆலயமே"—சுத்தானந்தர்.

| சோதி 2. | விக்கிரம ஐப்பசி மீ. | சுடர் 12. |
|---|---|---|


## ஸ்ரீ ஸாயியின் மகிமை.

(S K N)

ராகம் ஆனந்தபைரவி] [தாளம் ஆதி

பல்லவி.

என்னென்று சொல்லுவேனடி— என் ஸாயி மகிமையை
(என்)

அனுபல்லவி

தொல்லுலகில் நரக அல்லல் பட்டுழலாமல்
எல்லையில்லா இன்பம் என்றும் தருவானடி (என்)

சரணம்

அன்னையும் அப்பனடி அன்புள்ள தோழனடி
தன்னிகரில்லை யெனத் தாங்கிடும் தெய்வமடி
உன்னிப் பார்த்திடிலோ ஓங்காரத் தத்துவன்டி
அன்னை பராசக்தி அற்புத பாலனடி (என்)

எல்லோரும் ஓர்குலம் எல்லோரும் ஓர்மதம்
என்றே பறைசாற்றிய என்குரு நாதனடி
வஞ்சனை மாந்தர்களும் நெஞ்சமதில் நினைந்தால் [னடி
அஞ்சேல்! அஞ்சேலென அபயகரமளித்து ஆதரிப்பவ
(என்)

# ஸ்ரீ ஸாயிநாதன் தரிசனம் பெறல்.

(S. K, N.)

ராகம் சுருட்டி] [தாளம் ரூபகம்

பல்லவி

ஆனந்தமான ஜோதி—அற்புதக் காக்ஷி
ஐயநின் (ஆன)

அனுபல்லவி

தானந்தமில்லாத சற்குரு பாதம்
தத்தோம் தரிகிடதோம் தளாங்குதோமென நடமிடும்
(ஆன)

சரணம்

நாலு வேதங்களும் ஆறு சமயமும்
நவின்ற நற்பாதம்
நானிலத்தோர் நயமுறச்செய்யவந்த
நல்லதொரு பாதம்
நானற்ற பேர்களுக் கின்பம் தரநாடி
நின்ற புகழ் பாதம்
நாதாந்தத்துள் வேத நாயகனாய்வீற்று
நல்லுரை செய் பாதம். (ஆன)

[முடுக்கு]

கொஞ்சும் மயிலும் வள்ளியுடன்
கூத்தாடிய திருப்பாதம்
நஞ்சுண்ட கண்டதேவன்
நற்சபையாடிய பாதம்
மிஞ்சுமசுரர்களை வதைத்த
மூவுலகளந்த பாதம்
செஞ்சொற் பாமாலை புனையும்
சிவசக்தி ஸாயிபாதம். (ஆன)



# சொல்லும் செயலும்.

(ஆசிரியர்)

இன்றைய உலகில் நாம்காணும் காட்சி ஒன்று; அது எங்கும் சர்வசாதாரணமாய் விட்டது. பிரசங்கம் செய்ய ஆயிரக்கணக்கான குருமார் இருக்கிறார்கள். அவர்களுடைய பிரசங்கங்களைக் கேட்கவோ லட்சக்கணக்கான மக்கள் கூடுகிறார்கள். இவர்களில் நூற்றுக்கணக்கானவர்களே கருத்தாய்க் கேட்கிறார்கள்; இவர்களில் பத்துப்பேர் உணருகிறார்கள். மொத்தத்தில் ஒருவரோ அன்றி இருவரோ மாத்திரம் கற்றுக் கேட்டு அறிந்ததை செய்கையில் கொண்டுவருகிறார்கள்.

பிறருக்குச் சொல்லுமொன்றைத் தன் அனுபவத்தில் கண்டறிந்தவனே உத்தமன். அவனது சொல்லில் ஒரு சக்தி உண்டு. அதை எல்லோரும் கேட்டுத்தான் ஆகவேண்டியிருக்கிறது. அழகாகச் சொல்லாவிட்டாலும் உள்ளத்தில் அனுபவத்தோடும் ஒன்றுபட்டசொல் கேட்டோரின் உள்ளத்தை உணரச்செய்து மலர்த்துகிறது. காந்தி ஒரு சொல் சொல்லும்போது உலகம் எல்லாம் காது கொடுத்துக்கேட்டது. காரணம் காந்தி தான் செய்யாத ஒன்றை மற்றவர்களுக்கு உபதேசிப்பதில்லை. மகான் காந்தியடிகள் உள்ளத்தாற் பொய்யாதொழுகினவரானபடியால் இன்று உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உறைகின்றார்.

மௌனத்தின் தத்துவம் என்ன? ஆராய்ந்து பார்த்தால் முடிவில் செயலே தோன்றும். யாழ்ப்பாணத்தில் வியாவிழான் என்ற ஊரில் ஓர் மௌனசபை உளது. அவர்கள் பேசுவது கிடையாது. எந்த நேரமும் ஏதாவது செய்துகொண்டிருப்பர் அவர்களை ஒருமுறை சென்றுபார்த்தவர்கள் நாம் எல்லாம் அவர்களைப் பார்த்ததனாலேயே வீணாய் எவ்வளவு நேரத்தை வீணாக்கி விட்டோம் என்று சொல்லத் தோன்றும்.

“குலைக்கிற நாய் கடியாது” இது சாதாரண பழமொழி. இதில் ஒரு பெரிய தத்துவம் அடங்கியுள்ளது. வெளிக்கருத்து-கண்டவுடனே சத்தம் வைத்துக் குலைக்கிற நாய் கிட்டவும் வராது;

கடிக்கவும் மாட்டாது. ஒன்றும் பேசாமல் கிட்டவருகிற நாய் கிட்டவந்ததும் பாய்ந்து கடித்துவிடும். மனிதனுக்கும் இது பொருந்தும், நான் அது செய்வேன் இது செய்வேன் அது செய்தேன் இது செய்தேன் என்று வாய்ப்பறை அடிப்பவன் செய்வதும் ஒன்றுமில்லை, செய்ததும் ஒன்றுமில்லை. செயல்வீரன் சொல்லவேமாட்டான்.

சொன்னதன்படி செய்வதே அறம். வள்ளுவர் கூறுகின்றார் "கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக". தற்காலப்படிப்பு முறையிலே சொல் செயலை விட்டு வேறாகப் பிரிந்து நிற்கிறது. ஆயிரக்கணக்கான ரூபாய்களைச் செலவுசெய்து அந்நிய நாடுகளுக்கு மாணவர் படிக்கச் செல்கின்றனர். திரும்பிவந்து பேசுகின்றார்களே தவிர செய்கையைக் காணவில்லை.

இதனாலேதான் மகாத்மா வார்தா கல்வித்திட்டத்தில் செயலை முதலிற் புகுத்தினார். செய்கையிலிருந்தே பேச்சு எழும்பவேணுமென்கிறார். செய்கிறதைப்பற்றியே பேச்சு நிகழவேண்டும். செய்யாததைப்பற்றி பேசுவதினால் யாருக்கு என்ன லாபம்?

பிறருக்குப் போதிக்க விரும்புபவன் முதலில் தான் நிறைய வேண்டும். தன்னைச்சேர்ந்தவர் இன்பமடையத் தான் வாழ்க்கையை முன் மாதிரியாக வாழவேண்டும். அப்போ அவன் வாழ்க்கையைப் பத்துப்பேராவது பின்பற்றுவர். செயலிலாது பேசுபவனின்சொற்கள் பேசும்வரை அழகாயிருக்கும். பேசி முடிந்ததும் காற்றுடன் காற்றாய்க் கலந்துவிடும். இதையே யோகி சுத்தானந்தர்

"தானும் நிறைவுற்றுத் தன்னவரும் இன்புறுதற்
கான ஒழுக்காறே அறம்"

என்கிறார். சொல்லைச் செயலில் காட்டும்போதுதான் ஒருவன் நிறைகிறான்.

சுவாமி சிவானந்தர் கூறுகிறார். சளசளவென்று பேசாதே; அது உன் சக்தியை வீணாக்கும். நூறாண்டுகள் பேசுவதினும் ஒரு நாள் தியானிப்பது மேல். ஊண், உறக்கம், பேச்சு, சொல் அனைத்திலும் மிதமாயிரு. அளவறிந்து வாழ். சாதனம் செய்.

சொற்படி நினைப்பு; நினைவின்படி செயல் நிகழவேண்டும்.



இறைவன் அர்த்தநாரீச்சுரவடிவத்தான். சிவமும் சக்தியும். சிவம் அறிவுசொரூபம் சக்தி செயல் வடிவம். சக்தியில்லாமல் சிவம் இல்லை. மணியும் ஒளியும்போல; ஒளியில்லாமல் மணியில்லை. ஒளியை மணியினின்று பிரித்தால் மணியில்லை. மணி என்று உண்டோ ஒளியும் அன்று உண்டு. அதுபோலவே சிவமும் சக்தியும். அதுபோலவே அறிவும் செயலும். அறிவின் ஒருதோற்றமே சொல். அறிவும் செயலும் எப்படியோ சொல்லும் செயலும் அப்படி விட்டுப்பிரிக்கமுடியாதவை.

பகுத்தறிவுள்ள மனிதன் அறிவுவன்மையால் சொல்லுக்கும் செயலுக்கும் வேற்றுமைகண்டு செயலைப் புறக்கணித்தான். அதன்பலனை இன்று அநுபவிக்கிறான். தாயுமானார் சொன்னார் "சொல்லான் முழக்கிலோர் பயனில்லை" இவன் வாயால் தம்பட்டம் அடித்துத் திரிந்தான். செயலை மறந்தான். இன்று உணவுக்குக் கஷ்டப்படுகிறான். அடுத்தகப்பலை எதிர்பார்த்து வீட்டில் உலையேற்றவேண்டியகாலம் வந்துவிட்டது.

அரசாங்கம் என்ன செய்கிறது. செயலின் முக்கியத்தைப் பற்றிப் பிரச்சாரம் செய்கிறது. வெறும் பேச்சினால் மாத்திரம் ஜனங்களின் மனதைத் திருப்பிவிட முடியுமா? பேச்சுப்பிரச்சாரத்திற்குக் கொடுத்திருக்கும் முக்கியத்துவம் செயலுக்குக் கொடுபடாமையினால் இன்றும் பழைய பிழையே மலிந்துகிடக்கிறது.

இன்று நடைபெறும் நவராத்திரிப் பண்டிகை எதை நினைவூட்டுகிறது? மக்களின் செயலையல்லவா? தமிழனின் வீரம், செல்வம், கல்வி இவற்றை செயலில் சாதித்த வன்மையே இறைவணக்கமாக அன்றுதொட்டு இன்றுவரை நடைபெற்று வருகிறது. இறைவனைச் செயலினால் உணரவேண்டுமென்று ஒரு பெரியார் கூறுகின்றார்.

'சீலத்தால் அறிவால் அன்புத்திறத்தினால் பணியாலுன்னை
ஞாலத்தார் உணர்ந்து போற்றி"

ஒழுக்கம், அறிவு அன்பு, செயல் இவைமூலமாக உலகோர் இறைவனை உணரவேண்டும். வெறும் சொல்லுக்கு அங்கே இடமில்லை. செயலில்லாத சொல் உயிரில்லா உடம்புபோலாம்.

"சொல்லும் செய்கையும் ஒன்றெனத் துலங்கிடவேண்டும்"

என்கிறார் யோகி சுத்தானந்தர். வள்ளுவர், பயனில்லாத சொற்களைச் சொல்பவனை மக்களுட் பதரென்று சொல்கிறார். தான் பயனடையாத சொற்களை மற்றையோருக்குச் சொல்பவன் பதருக்குட் பதராகிறான்.

இன்னோரிடத்திலே யோகி சுத்தானந்தர்

"அறிவுங் கல்வியும் அறமும் அருளும்
பாருக்கெல்லாம் பயனுறு தொழிலும்
அன்பும் போற்றி மன்பதை வாழ்கவே"

# ஆத்மீக வெடிகுண்டு,

(ஸ்ரீ சுவாமி சிவானந்தர்)

இப்பொழுது விஞ்ஞானம் காலத்தையும் இடத்தையும் மிகவும் சுருக்கி இல்லை என்னும்படி செய்திருக்கிறது. இந்தியாவிலிருந்து லண்டனுக்கு முப்பத்தாறு மணி நேரத்தில் எவரும் சென்றுவிடமுடியும். எவ்வளவு பெரிய அதிசயம்! இந்தப்பூமி இப்பொழுது மிக மிகச் சிறியதாகிவிட்டது. ஆனால் உண்மையிலேயே விஞ்ஞானம் மனித சமூகத்தின் சந்தோஷத்தை வளர்க்க உதவி இருக்கிறதா என்று ஆராய்ந்தால் 'இல்லை இல்லை' என்பது தான் கிடைக்கும் பதில். அது மனிதனின் தேவைகளையும், ஆடம்பரத்தையும் பலமடங்கு பெருக்கி இருக்கிறது. இன்று ஆடம்பரப் பொருளாக இருக்கும் ஒன்று நாளை அத்தியாவசியமான தேவைப் பொருளாக ஆகிவிடுகிறது. அது மனிதனை பிச்சைக்காரனாக ஆக்கிவிடுகிறது. அது மனித உள்ளத்தில் அமைதியின்மையை அதிகப்படுத்திவிடுகிறது ஒருநாள் மீரட்டிலிருந்து ராணுவ அதிகாரியான ஒரு ஆங்கிலேயர் ஆஸ்ரமத்திற்கு வந்தார். ரிஷிகேஷில் நிலவும் அமைதியும் சாந்த நிலையும் அவரை கவர்ச்சித்தது. நான் தாங்கள் இங்கிலாந்திலும், மலைகளில் சில இடங்களிலும் இங்கிலாந்தின் நிம்மதியான சில மூலை முடுக்குகளிலும்

---

முற்பக்கத்தொடர்ச்சி

என்கிறார்; இன்றைய உலகம் அனுபவத்தில் செயலின் அவசியத்தை ஓரளவு உணர்ந்திருக்கிறது. நடைமுறையில் வருவதே கஷ்டமயிருக்கிறது. செயலின் முக்கிய தத்துவம் மக்களிடையே நிலைபெற்று மேலோங்க எல்லாம் வல்ல திருவருள் கூட்டிவைப்பதாக.

ஆத்மஜோதி ஆத்மீக அநுபவங்களை மக்களிடையே காலத்திற்குக்காலம் எடுத்துக்காட்டியதோடு செயலிலும் அதைக்கொண்டுவர வேண்டுமென்று வற்புறுத்தி வந்திருக்கிறது. சாஸ்திரத்திலும் சாதனமே முக்கியமானது.

சுவாமி சிவானந்தரின் இலங்கை விஷயம் சாதனத்தையே அடிப்படையாகக் கொண்டது. வேதஉண்மைகளுக்கும், பண்டைத் தவமுனிவர்களுக்கும், இமயத்தின் பெருமைக்கும் ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகின்றார் சுவாமி சிவானந்தர். அவரது சாதன உண்மையே அவரது உபதேசம்.

"சொல்லும் செயலும் ஒன்றான
சுத்தசங்கத் திருத்தொண்டர்
வெல்லும்சக்தி பெற்றிடுவோம்
விரிவான் அப்பன் அருளாலே."—சுத்தானந்தர்.



அமைதியைப்பெற முடியுமென்று கூறினேன். அவர் 'இல்லை' என்றும் தலைக்குமேல் எங்கும் விமானங்கள் பறக்கின்றன என்றும் இங்கிலாந்தில், 'சாந்தி-அமைதி' என்பது தெரியாதென்று கூறினர்.

விஞ்ஞானம் உலகத்தின் அழிவைக்கொண்டுவந்து கொண்டிருக்கிறது. இப்பொழுது எவன் கையில் அதிக அணுக்குண்டுகள் இருக்கின்றனவோ அவனே உலகத்தின் ஏகச்சக்கரவர்த்தியாக விளங்குகின்றான். அணுக்குண்டின் ரகசியம் ஒரு சில அமெரிக்க, ஆங்கில விஞ்ஞானிகளின் கையில் இருக்கிறது. இப்பொழுது விஞ்ஞானிகளில் சிலர் இரவும் பகலும் அணுக்குண்டின் ரகசியங்களை அறிவதில் இன்னும் ஆர்வத்துடன் வேலைசெய்து கொண்டிருக்கின்றனர்.

விஞ்ஞானிகள் சமீபத்தில் கண்டுபிடித்த அணுக்குண்டுகளின் தோற்றத்தின் பின் உலகம் அனைத்தும் கதிகலங்கி நிற்கிறது அணுக்குண்டு ஜப்பானியர்களின் உள்ளத்தில் பயத்தை ஏற்படுத்தி, கண் இமைக்கும் நேரத்திற்குள் சரணடையும்படி செய்துவிட்டது. ஒரு அணுக்குண்டானது பல மைல் சுற்றளவுக்கு உயிர்களனைத்தையும் பிறபொருள் யாவற்றையும் எரித்து நாசம் செய்ய வல்லது. அது வெடிக்கும் பொழுது உண்டாகும் பயங்கர மின்னல் வெளிச்சம் வெகுதூரத்திலிருந்து பார்ப்பவர்களின் கண்ணையும் ஒளிமயங்கச்செய்து குருடாக்கும் தன்மையுடையது, அவ்வளவு சக்தியுள்ளது இந்த அணுக்குண்டு.

ஆனால் இந்த அணுக்குண்டைவிட கணக்கில் அடங்காமடங்கு அதிக சக்தியுள்ளது ஆத்மீக வெடிகுண்டாகும். இது முனிவர்களாலும், தபோசிரேஷ்டர்களாலும் கண்டுபிடிக்கப்பட்டது. யாக்ஞவலக்கிய முனிவர், ஸ்ரீ சங்கரர், பதஞ்சலிமகரிஷி, ஸ்ரீ தத்தரேயர் முதலான பெரியோர்கள் சர்வ வல்லமையுள்ள இந்த வெடிகுண்டை வைத்திருந்தனர். பக்த மீராவும் பிரகலாதனும் இந்த ஆத்மீக வெடிகுண்டை உடைத்தாயிருந்தனர். பிரகலாதன் தீயிலுள் எறியப்பட்டான், யானைகளால் மிதிக்க விடப்பட்டான் எனினும் அவனிடத்தில் ஆத்மீக வெடிகுண்டு இருந்தமையால் அவன் உயிருடன் இருந்தான். மீராவுக்கு விஷம் கொடுக்கப்பட்டது—அவள் விஷத்தைப்பருகினாள் அவளுடைய ஆத்மீகவெடிகுண்டு விஷத்தை தேவாமிர்தமாகவும், சர்ப்பத்தைபூமாலையாகவும் மாற்றியது. தெய்வசிந்தனையுள்ள அந்த பக்தர்களெல்லாம் இந்த சர்வ சக்தியுள்ள வெடிகுண்டை வைத்திருந்தார்கள். இந்த ஆத்

மீக வெடிகுண்டு அழிவுதரும் வெடிகுண்டு அல்ல. இது ஒரு புதிய தெய்வீக வாழ்வை உள்ளத்தில் புகச்செய்து அணுக்குண்டின் பயத்தை அறவே ஒழித்துவிடும். இது கோடிக்கணக்கான அணுக்குண்டுகளினால் ஏற்பட்ட தீமைகளை மாற்ற வல்லது. இந்த ஆத்மீக வெடிகுண்டு ஆத்மாவின் அபார சக்தியின் உருவேயாகும். நெருப்பு இதை எரிக்க முடியாது. தண்ணீர் இதை நனைக்கமுடியாது. கத்திகள் இதை துளைக்கமுடியாது. இது உண்மையிலேயே ஒரு அற்புதமான தெய்வீக வெடிகுண்டு. இது சாசுவதமானது. எல்லையற்றது, அழியுந் தன்மையற்றது, விஞ்ஞானிகளை வெட்கத்தில் ஆழ்த்தி தலைகுனியும்படி செய்யவல்லது.

இந்த சக்தியுள்ள அற்புதமான வெடிகுண்டை உன்னுடைய இருதயத்திலேயுள்ள ஆத்மீக பரிசோதனை சாலையில் நீ உற்பத்தி செய்துகொள்ளலாம். உன்னிடத்திலேயே அளவற்ற சக்தியும் உள்மறைந்து கிடக்குர் ஆக்கும் சக்தியும் நிறைந்த வெடிமருந்துக் கிடங்கு புதைந்துள்ளது. தெய்வீக நற்குணங்களை அபிவிருத்தி செய். உன்னையே நினைத்து உன்னுள் பார், பரிபூரண ஒழுங்கு மார்க்கத்தை அடை. இயமத்திலும் நியமத்திலும் உன்னை உறுதிப்படுத்து. அழிவில்லாப் பொருளான சத்சித் ஆனந்தத்தை ஒரே பொதுவான மனசாக்ஷியை எல்லா உயிர்களிடத்தும் பொருந்திய ஆத்மாவினுள் அழியா உன்னை நோக்கி சதாகாலமும் தியானம் செய். இப்பொழுது ஆத்மீக வெடிகுண்டு தயாராக இருக்கிறது. இது உன்னை அணுகுண்டிலிருந்து காப்பாற்றும். இந்த ஆத்மீக வெடிகுண்டுக்கு யுரேனியம் தேவையில்லை. இது பரந்த அன்பும், அமர வாழ்வும், இடைவிடா மகிழ்ச்சியும், சாசுவதமான அமைதியும், மிகவும் மேலான அமர நிலைபொருந்திய தெய்வீக ஆசிர்வாதமும், கலந்த கலட்பாகும். தியானம் என்னும் விமானத்தில் ஏறி உயரே பறந்து எங்கினும் யாவர்மீதும் ஆத்மீக உணர்ச்சியை எழுப்பும் அமர வாழ்வாகிய இந்த ஆத்மீக வெடிகுண்டை எறி. வாழ்வின் தேவாமிர்தமாகிய இவ்வாத்மீக வெடிகுண்டுகளை உலகமெங்கிலும் வீசி எறிந்து நிரப்பு. ஆத்மீக வெடிகுண்டுகளின் மழை வருஷிக்கட்டும்!

உங்களில் ஒவ்வொருவரும் அளவற்ற சக்தியும் அமர வாழ்க்கையுமாகிய ஆத்மீக வெடிகுண்டை அடைவீராக! விஞ்ஞானிகளின் அணுக்குண்டுகளைக் கண்டுபிடிக்கும் தங்கள் வீண் முயற்சியை கைவிட்டு தங்களையே உள்நோக்கி இப்புகழ்பெற்ற ஆத்மீக வெடிகுண்டை கண்டறிவதில் தங்கள் திருஷ்டியைத் திருப்பி உண்மையிலேயே உபயோகமுள்ள ரிஷிகளாகவும், முனிவர்களாகவும், யோகிகளாகவும் ஆவார்களாகுக!



# ஸ்ரீ ஸாயி பாபாவின் ஜீவிய சரித்திரம்.

(ஸ்ரீ எஸ். கே. நாராயணசாமி ஐயர்.)

உலகத்தில் மானிடராய்ப்பிறந்த ஒவ்வொருவரும் கடவுளை வழிபடுவதென்பது ஒரு முக்கிய கடமையாகும்—கடனுமாகும். நாம் இகத்தில் அனுபவிக்கும் இன்பமென்று தோன்றுவனவெல்லாம், ஆண்டவன் கருணையில்லாவிட்டால், துன்பமாகவே மாறிடும். தெய்வீக வாழ்க்கைமேற்கொண்டு அதில் அடையும் இன்பம் இன்பமே தவிர, மற்றவையெல்லாம் நிரந்தர இன்பமல்ல. துன்பத்தின் வித்தேயாம்.

தெய்வீக இன்பம் அடைவது எப்படி என்றால், இக்காலத்தில் அதை அடையும் மார்க்கம் வெகுசுலபமெனப் பெரியோர்கள் காட்டியிருக்கிறார்கள். முன்யுகங்களிலெல்லாம் ஆண்டவன் தரிசனம் கிடைக்கவோ அல்லது அவன் அருள்பெறவோ ஒவ்வொருவரும் காயக்கிலேசம் செய்து, அன்ன ஆகாரமின்றி, அகோர தவம் செய்து நற்கதியடைந்திருக்கிறார்கள். ஆனால் இக்கலியுகத்தில் நம் தீர்க்கதரிசிகள் அவ்வளவு கடினமான விதிகள் ஏற்படுத்தி வைக்கவில்லை-ஏன்? இப்பொழுதிருக்கும் மானிட வர்க்கத்தினர்களுக்கு தவம் முதலியன செய்யவோ, ஒரு மனவழிப்பாடோடிருக்கவோ சக்தியில்லாமைபோலும்! ஆதலால் மகான்கள், அவதாரபுருடர்கள், இவர்களின் சரித்திரங்கள் வாசித்தாலும், கேட்டாலும், இவைகட்கெல்லாம் மேலாகிய "நாம ஸங்கீர்த்தனம்", அதாவது பகவானின் திருப்பெயர்களை மட்டில் எப்பொழுதும் அந்தரங்கமாய் உச்சரித்துக்கொண்டிருந்தாலே, தெய்வீக இன்பம் நம்மை வந்தடையும் என்று புராணங்கள் மூலம் சொல்லியிருக்கிறார்கள்.

நாம ஸங்கீர்த்தனம் செய்ய அவரவர்களுக்குகந்த இஷ்ட தேவதைகளான, முருகன், ராமன், கிருஷ்ணன், ஸாயிபாபா என்று பல மூர்த்திகள் இருக்கிறார்கள். அவர்களில் கடைசியில் சொன்ன ஸ்ரீ ஸாயிபாபா, இந்த யுகத்தில் கலியுகக் கந்தனெனவே

விளங்கிவருகிறார். கூப்பிட்ட தக்ஷணமே நமக்கு அடையம் அளிக்கிறார். அவரின் முக்கிய கொள்கையாவது "நாலிருக்க பயமேன்; உன் சுமையை என்மேல் போடு, நான் தாங்குகிறேன்'', என்பதே. இவருக்கு ஜாதி, மத, பேதம் கிடையாது; ஸத்யஸ்வரூபி; எல்லா ஜீவன்களும் ஒன்றென மதிக்கும் கருணைக்கடல்.

இந்த ஸத் புருஷரின் சரித்திரத்தைக் கூடியவரை இந்த இதழில் சுருக்கமாக, அவன் துணைகொண்டு, எழுதுகிறேன்.

ஸ்ரீ ஸமர்த்த ஸத்குரு சச்சிதானந்த ஸ்ரீ ஸாயிநாத் மகாராஜ் என்று அன்னவரை அழைப்பார்கள். ஆனாலும் பக்தர்கள் எல்லோரும் "பாபா'' என்ற அன்புப் பெயரால்தான் தொழுவது வழக்கம்.

ஸ்ரீ ஸாயி பாபாவின் 16 வயது வரையிலுள்ள சரித்திரம், ஊர், அவர் தாய் தந்தையர்கள் அவர்களிட்டபெயர் முதலியன இன்றுவரை எவரும் அறியவில்லை. அவர் ஜீவியகாலத்தில் அவருடன் பழகிக்கொண்டிருந்த சிலர் இன்றுமிருக்கிறார்கள். ஆனால் அவர்களும் அறிந்தவர்களில்லை. அவைகள் தேவரகசியம்தான். இருந்தாலும் பாபாவே தன் வாக்குமூலம் உரைத்த சிற்சில குறிப்புகளாலும், மற்றும் அவருடன் கூட இருந்து பழகிய நண்பர்கள் கொடுத்த ஆதாரங்களாலும், சென்னை அகில இந்திய ஸாயி ஸமாஜத்தாரால் (All India Sat Samaj, Madras) பிரசுரிக்கப்பட்ட பலபுத்தகங்களினின்றும் கிடைத்த குறிப்புகளைக்கொண்டு சுருக்கமாக எழுதுகிறேன்.

(பழைய) நைஜாம் ராஜ்யத்தில் பத்ரீ என்றொரு சிறு கிராமத்தில் ஹரிஸாடே, லக்ஷ்மீ என்னும் ஏழைப் பிராமண தம்பதிகள் வசித்துவந்தார்கள். ஹரிஸாடே நான்கு வேதங்களுமுணர்ந்த அறிவாளி. ஈஸ்வர பக்தியுடையவர். மக்கட் பேறில்லாமல் மனம் வருந்திக்கொண்டிருந்த காலத்தில் கடவுளின் அனுக்கிரகத்தால் லக்ஷ்மி காலக்கிரமத்தில் கர்ப்பவதியாகி ஒரு ஆண் மகவையும் பெற்றாள். சதிபதிகள் இன்புற்றிருக்கும் நாளில் 4, 5 மாதங்களுக்குப் பிறகு குழந்தை மிகவும் நோய்வாய்ப்பட்டிருந்தது. எவ்விதமான சிகிச்சைகள் செய்தும் குணம் ஏற்படாதது காணவே, ஹரிஸாடே குழந்தையின் ஜாதகத்தை சில சோதிடர்களிடம் காண்பிக்கலானார். சோதிடர்கள் "இந்தக்குழந்தை தாய்தந்தையர்களிடம் வளராது. பிற்காலத்தில் உலகத்தை உய்விக்கச் செய்யும் ஒரு பரம யோகியாவான்; இவனை உங்களிடம் பிச்சை வந்துகேட்கும் ஒரு பக்கீரியிடம் ஒப்புவித்து விடவேண்டும்'' என்று உரைத்தார்கள். பெற்றோர்கள் இவ்வார்த்தைகளாலும், குழந்தைக்கு உடம்பு குணமேதும் ஏற்படாமலிருப்பதும் கண்டு மனமுருகி பரமனைத்தொழுது நிற்குங்கால், அவர்களுக்கு ஆண்டவன் ஸ்வப்னம் மூலம் காட்சியளித்து, "சோதிடர்கள் சொன்னபடியேதான் நடக்கும்'' எனச் சொல்லி மறைந்தார். இப்படிச் சில நாள் சென்றபிறகு, ஒரு முகம்மதிய பக்கீரி ஹரிஸாடேயின் வீட்டை நாடி பிச்சைகேட்கவந்தார். பக்கீரி குறிப்பாகக் குழந்தையை (பாபாவை) பிச்சைகொடுக்கும்படி கேட்டான். தம்பதிகள் மனம் கலங்கினார்கள். ஆண்டவன் ஸ்வப்னத்தில் சொன்ன வார்த்தைகளையும் மறந்தார்கள். இருந்தபொழுதிலும், பக்கீரி விடாக்கண்டனாய் 'தாய் தந்தையர்களே! எனக்கு ஆண்டவனிட்ட கட்டளையின்படி இக்குழந்தையை உங்களிடம் பிச்சைகேட்க வந்திருக்கிறேன். இக்குழந்தை உங்களிடம் வளராது. குழந்தை கபீரின் (கபீர்தாஸ்) அம்சம். என்னிடம் கொடுத்துவிடுங்கள்'' என்றான். உடனே தம்பதிகளுக்கு பகவானின் ஆக்ஞை நினைவுக்கு வரவே, மிகவும் ஏங்கிய மனதுடன் குழந்தையை பக்கீரியிடம் கொடுத்தார்கள். பக்கீரும் பெருமகிழ்ச்சியுடன் குழந்தையைப் பெற்றுக்கொண்டு தன் இல்லம் சேர்ந்தான். சில நாள் சென்றபிறகு குழந்தையின் பிரிவாற்றாமையால் நோய்வாய்ப்பட்டு ஹரிஸாடேயும், லக்ஷ்மியும், பூவுலகை நீத்தார்கள்.

பக்கீரும் அவர் மனைவியும் குழந்தையை நாளொரு மேனியும் பொழுதொருவண்ணமுமாய் சுமார் ஐந்து வருடங்கள் வளர்த்தார்கள். பக்கீருக்குத் திடீரென வியாதி மேலிடவே, குழந்தையை வளர்க்கப் போதுமான வசதியில்லாமை கண்டு பக்கீரின் மனைவி துக்கத்திலானாள். பக்கீர், "ப்யாரி! உலகில் ஒருவன் பிறந்தானென்றால் அவன் இறப்பது நிச்சயம். ஆதலால் இறப்பதைக்குறித்து துக்கப்படுவது பெருந்தவறாகும். நான் இவ்வளவு வருடங்களாய் உங்களைக்காப்பாற்றிக்கொண்டு வந்திருக்கிறேனென்று நீ நினைத்தால் அது மிகவும் பேதைத்தனமாகும். ஆண்டவனின் ஒப்பற்ற சக்தியாலும், அவன் கடைக்கண்பார்வைக் கரு

ணையாலும் உலகில் ஒவ்வொரு உயிரும் உலவுகிறது. உங்களை அல்லா காப்பாற்றுவார் கவலைப்படாதே. சமீபத்தில் எட்டுமைல் தூரத்தில் சேலூ என்ற கிராமத்தில் கோபால் ராவ் தேச்முக் என்ற ஜமீன்தார் இருக்கிறார். (இவரைவேங்குசா என்றுமழைப்பதுண்டு) அவர் மிகவும் தெய்வபக்தியுடையவர்; ப்ரும்மஞானி; முக்காலமும் உணரும் தன்மைவாய்ந்தவர்; இரப்போருக்கு இல்லையென்று சொல்லாமல் அவர்களுக்கு வேண்டிய உபசரணைகள் செய்து ஆதரிக்கும் பரம சாந்தகுணமுடையவர். அவரிடம் நம் குழந்தையைக் கொண்டுபோவாயாகில், உன்னையும் குழந்தையையும் கட்டாயம் காப்பாற்றுவார்' என்று சொல்லி முடிக்குமுன் பக்கீர் ஜோதியில் கலந்தார்.

ஈமக்கடன்களை முடித்துக்கொண்டு பக்கீரின் மனைவி குழந்தையுடன் சேலூ கிராமம் சென்றாள். ஜமீன்தாரைக்கண்டு விபரம் தெரிவித்து குழந்தையையும் அவரிடம் கொடுத்தாள். ஞானதிருஷ்டியினால் அறிந்த வேங்குசா குழந்தையைக்கண்டு, மிகுந்த உற்சாகத்துடனும், பக்திபரவசத்துடனும், "கபீர் வந்துவிட்டார், கபீர் வந்துவிட்டார்", என்ற குதூகலகோஷத்துடனும் குழந்தையைத் தழுவி வாரியணைத்து உச்சிமுகந்தார்-ஒருக்ஷணமேனும் சிறுவனை (பாபாவை) விட்டுப் பிரியாமல் பூஜை சமயத்திலும், சாப்பிடும் பொழுதும், தூங்கும் பொழுதும், மற்றெல்லா வேளையினும் தன்னுடனேயே வைத்துக்கொண்டிருந்தார். சிறுவனும் அவரைக் குருவெனவே நினைத்து, "குருபக்தியே சாலச் சிறந்தது; அவர் பணியே ஆண்டவனிடம் செல்லும் வழி. அவர் கருணைப்பார்வையே தனக்கு ஞானப்பால் ஊட்டும் வாரிதி-என நினைந்து நாளடைவில் தன் குருவின் கருணைப்பார்வையாலேயே சகலவிதமான சாஸ்திரங்களும் கற்று பேரறிவு படைத்தான். இதைக்கண்டு அவ்வூர் ஜனங்களும் மற்றும் வேங்குசாவின் நண்பர்களெல்லோரும் "நேற்றுவந்த முகம்மதியச் சிறுவனிடம் இவருக்கு என்னடா இவ்வளவு அன்பும், ப்ரேமையும்; நம்மையெல்லாம் ஒரு பட்சமாய் நடத்துகிறார்", என்று பொறாமைகொண்டு எல்லோரும் சேர்ந்து அச்சிறுவனை ஒரு சதிக்குள்ளாக்குவதென்று தீர்மானித்தார்கள். (சிறுவனை சேலூ கிராமத்தார்கள் பீமனென்று அழைத்தார்கள். காரணம் அவன் தேகப்பலமும் தோற்றமுந்தான்). ஒருநாள் வேங்குசாவும் பீமனும் (பாபாவும்)



சேலூரவுக்குப் பக்கத்திலிருக்கும் ஒரு காட்டில் தனித்திருந்தார்கள். சீடனின் தொடையின்மேல் தலைவைத்துக்கொண்டு ஒரு கல்லாசனத்தில் படுத்திருந்தார் வேங்குசா. இதுசமயம்கண்டு பீமனின் விரோதிகள் மறைவாக நின்று கல்லை வீசியெறிந்தார்கள். ஒருசெங்கல் கிறுகிறுவென்று சுழன்று பீமன் தலைக்குநேராக வந்தது-அதுசமயம் வேங்குசா கண்விழிக்கவே, வேகமாகச் சிறுவனைநோக்கிவரும் கல்லை, அவர் தன்சக்தியினால், பீமன்மேல் படாமல்செய்து அவன் தலைக்குநேராக அப்படியே அந்தரத்தில் நிறுத்திவிட்டார். விரோதிகள் இந்த ஏமாற்றங்கண்டு சகியாமல் மற்றொரு செங்கல்லை வீசவே அது வேங்குசாவின் சிரசில் தாக்கி குபீரென்று ரத்தம் பெருகியது. சிறுவன்கண்டு மனம் பதைத்தான். "குருநாதா! இதென்ன அநியாயம். நான் தங்களுடனிருக்கும் பொறாமையாலல்லவா இக்கெடுதி என்னால் உங்களுக்கு நேரிட்டது. இனி நான் தங்களுடன் இருப்பது சரியல்ல-அதுவும் தங்கள் உயிருக்கு ஆபத்துக்கொண்டுவரும் நிலையில்; என்னை மன்னித்துவிடுங்கள்" என்று கதறினான். குருநாதனாகிய வேங்குசா சிறுவனைப்பார்த்து 'குழந்தாய்! நீ என்னைப்பிரிந்து நான் மீண்டும் உயிர்வாழ்ந்திருப்பது என்பது முடியுமா'' என்று கூறி சற்று நிதானித்தார். பிறகு சிறுவனை நோக்கி "அப்பா! நீ கூறியதுபோல் நாமிருவரும் பிரியும் காலம் வந்துவிட்டது. இது ஆண்டவன் கட்டளை. அதோ பார்! ஒரு "லம்பாடி" பசுமேய்த்துக்கொண்டிருக்கிறாள். அவளிடம் போய் நான் சொன்னதாகச்சொல்லி இந்தக் கமண்டலம் நிறையப் பால் "வாங்கிவா" என்றார். குருவின் கட்டளையைச் சிரமேற்கொண்டு, சிறுவனும் லம்பாடியிடம் சென்று பால் யாசித்தான். லம்பாடி "சிறுவனே! இது காராம்பசு, மலட்டுப்பசுவாயிற்றே; பால் கறக்காதே நான் என்ன செய்வேனப்பா" என்றுபதிலளிக்கச் சிறுவன் பசுவையும் லம்பாடியையும் குருநாதனெதிரில் கொணர்ந்து நிறுத்தி விபரம் தெரிவித்தான். வேங்குசா தன் கையினால் பசுவின் முதுகையும் ஸ்தனத்தையும், தடவிக்கொடுத்துவிட்டு பால் கறக்கும்படி ஆக்ஞாபித்தார். என்ன ஆச்சரியம்! காராம்பசுவின் மடி உடனே சுரந்து கமண்டலம் நிறைய பால் கொடுத்தது. வேங்குசா சிறுவனாகிய பீமனைக்கூப்பிட்டு "குழந்தாய்! கையை நீட்டு இதோ! நான் செய்த தவம், பூஜை, யோகம், பக்தி, ஞானம், தர்மம் மற்றுமுள்ள தெய்வவழிபாட்டின் பலன்களையெல்லாம் உனக்கே

யளித்தேன். நீ ஒருவனே இதைப்பெற்றுக்கொள்ள உரியவன்—தாங்கும் சக்தியும் உன்னிடம் தானுள்ளது. பெற்றுக்கொள்!" என்று அனுக்கிரகம் செய்து கைநிறைய மூன்றுதடவை பாலை விட்டு அருந்தச்செய்தார். பீமனும் அப்படியேசெய்திட குரு கடாக்ஷத்தால் ப்ரும்மஞானம் அடைந்தான். பின்பும் வேங்குசா சிறுவனை நோக்கி "பாலகா! அண்டவனின் பரிபூரண ஆசியாலும், உனக்கு உன் குருமூலம் கிடைத்திருக்கும் தபோ பலன்களாலும், நீ இவ்வுலகில் ஒரு ஆத்மஞானியாயும், பரிபூரணனாயும் விளங்குவாய். உலகில் யாவர்க்கும் எவ்வித இடுக்கண் வந்தபோதிலும் உன் பெயரை உச்சரித்தமாத்திரத்தில், அவர்கள் எவ்விதத் தன்மை வாய்ந்தவராயினும், அவர்களுக்கு நீ அபயமளித்துக் காப்பது உன் கடமை. உன் அருளை எல்லோருக்கும் வாரி இறை; உன் கருணைப் பிரவாகத்தில் உலகத்தார் மூழ்கியிருக்கட்டும்; இதோ உன் தலைக்குமேல் அந்தரத்தில் நிற்கும் கல்லையெடு; என் பாதத்தில்வை; இந்த வஸ்திரத்தையும், இந்தக்கல்லையும் உனக்குப் பிரசாதமாய் அளிக்கிறேன். இவைகளை சர்வஜாக்கிரதையாக நீ காப்பாற்றவேண்டும் இந்தக்கல் எப்பொழுது உன்னையுமறியாமல் தவறி விழுந்து உடைகிறதோ, அப்பொழுது நீ இந்தப் பூதவுடல் நீத்து சமாதி நிலை அடைவாய்; நீ இப்பொழுது என்கூட வா. நாளை மாலை நான் என் உடலை சுயேச்சையாய் விட்டுப்போகிறேன். அதற்குப்பிறகு நீயும் சுயேச்சையாய் சஞ்சரித்து உலகத்திற்கு நன்மைகளைச் செய்துகொண்டிருப்பாய்" என்றார். மறைந்திருந்த விரோதிகள் அங்குநடந்த சம்பவங்களைக் கண்டு வேங்குசா பாதத்தில் விழுந்தார்கள்—(பொறாமையினால்) கல்லெறிந்தவன் சவமாய் விழுந்துவிட்டானென்றும் அவனுக்கு உயிர்ப் பிச்சை கொடுக்கும்படியும், இனி எல்லோரும் நல்வழியில் நடப்பதாகவும் மன்றாடினார்கள். வேங்குசா அவர்களைப்பார்த்து மனமிரங்கி "தம்பிமார்களே! பொறாமை மிகவும் கொடிது. அதனால் உங்களுக்குக் கிடைத்த பலனை நீங்களே அனுபவித்து விட்டீர்கள். என்றாலும், இறந்தவனை மீட்க என்னிடம் இப்பொழுது சக்தியில்லை. இதோ நிற்கும் சிறுவனை (பாபாவை) வணங்கி மன்னிப்புக்கேட்பீர்களானால் மாண்டவன் மீள்வான்" என்று சொல்ல எல்லோரும் சிறுவன் காலில் விழுந்து உயிர்ப்பிச்சைக்கு மன்றாடினார்கள். சிறுவனும் இந்த விநோதத்தைப் பார்த்து திகைப்புற்று குருவைப் பார்த்து நிற்க, தன்



அன்புநிறைந்த ஜாடையால் குருநாதனும் உத்தரவு கொடுத்தார். பீமன் குருவைத் தியானம் செய்து உடனே அவர் பாததூளியையெடுத்து சவத்தின்மேல் போட, செத்துக்கிடந்தவன் உறங்கி விழித்தாற்போல் எழுந்தான். எல்லோரும் பின் வணங்கிச் சென்றார்கள்.

குருநாதன் வேங்குசா, தான் இச்சித்தபடி மறுநாள் மாலை அன்பர்களும், பக்தர்களும் சூழ, நாமஸங்கீர்த்தனங்கள் ஒலிக்க ஓங்கார சப்தம் வானைப் பிளக்கும் கோஷத்திற்கிடையே ஆழ்ந்த தியானத்திலமர்ந்து, இன்ப ஜோதியில் கலந்தார். குருநாதனுக்கு ஏற்பட்ட ஸம்ஸ்காரங்களையெல்லாம் முடித்துக்கொண்டு, சீடனும் (பாபா) பிறகு பல ஊர்கள் சுற்ற ஆரம்பித்தான்.

ஒருநாள் ஔரங்கபாத்துக்குப் பக்கத்திலிருக்கும் ஆரண்யத்தின் மரத்தடியில் கபீர்தாஸ் பாடல் ஒன்றைப் பாடிக்கொண்டு பாபா உட்கார்ந்திருந்தார். கையில் ஒரு சிலிம் (புகைபிடிக்கும் மண் குழாய்) சிமிட்டா, இருந்தது. அதுசமயம் ஒரு பாதசாரி காணாமற்போன தன் குதிரையைத் தேடிக்கொண்டு அவ்வழியே போவதைப் பார்த்தார். உடனே அவனைக் கூப்பிட்டு பாபா, "பாயீ, கொஞ்சம் புகை பிடித்துவிட்டுப்போ" என்றார். பாதசாரி மிகவும் பரிதாபமான குரலில், "ஐயா, புகைபிடிக்க இது நேரமில்லை; என் குதிரை காணாமற் போய்விட்டது. இந்தப்பக்கம் நீர் ஏதாவது கண்டீரா;' என்று வினவ, பாபா, 'குதிரை ஒன்றும் நான் பார்க்கவில்லை. ஆனாலும் இந்தத் திசைப்பக்கம் நேராகப் போவாயானால் ஒரு வேலி தென்படும். அதன் பக்கத்தில், உன் குதிரை மேய்ந்துகொண்டிருக்கும்" என்று சொல்ல அதே பக்கம் போய் பாதசாரியும் தன் குதிரையைக் கண்டுபிடித்தான். நேராகத் திரும்பிவந்து பாபாவுக்கு தெண்டனிட்டு, "பாபா! உன் அபார ஞானசக்தியால் நான் என் குதிரையை மீண்டும் பெற்றேன். உன் மகிமையை உலகம் அறியட்டும்" என்று பாதசாரி பாபாவின் மகிமையைப் பரவச்செய்தான்.

ஸாயிபாபா சிலநாட்கள் பல ஊர்கள் சுற்றி தனது 16 வது வயதில் முதன் முதலாக சீரடி என்ற ஊரை வந்தடைந்தார். அப்பொழுது அவர் ஒரு முகம்மதிய சந்நியாசியாகவே விளங்கினார். தான் சமாதிநிலையடையும்வரை அவ்விதமே இருந்தார். முதலில்

சீரடியிலும் வெகுநாட்கள் தங்காமல் மற்றும் பல ஊர்கள் செ
ன்று கடைசியில் தனது 20 வது வயதில் மறுபடியும் சீரடிவந்த
டைந்தார். பிறகு வேறு எங்கும் செல்லாமல் கடைசிவரை அங்
கேயே இருந்தார். சீரடியில் பகலில் ஒரு வேப்பமரத்தடியிலும்
இரவில் ஒருமசூதியிலும் தங்குவார் எப்பொழுதும் ஹரியைத்தியா
னம் செய்யும் நிலையிலிருப்பார். அவர் சிறந்த ராமபக்தர். சீரடி
வாசிகள் அவரை ஒரு முகம்மதிய கேளபக்கிரி என்றே நினைத்
தார்கள். அவர் ஜனசங்கத்தில் சேருவதில்லை. தன்னைத்தேடிவ
ரும் அன்பர்களுக்கு ஹிதோபதேசம் செய்து வேடிக்கையான
சன்மார்க்கக் கதைகள் சொல்லுவார். தினந்தோறும் 3 வீடுகளில்
பிச்சையெடுத்துக் கிடைத்ததைத் தானுண்பார். சிலர் மட்டும்
அவர் நடை, உடை, பாவனைகளைப் பார்த்து அவர் ஒரு மகான்
என்றும், அவதார புருஷர் என்றும் அன்பு செலுத்திவந்தார்கள்.

மசூதிக்கு விளக்கு ஏற்ற தினம் அவ்வூரிலுள்ள எண்ணெய்க் கடையில் எண்ணெய் யாசித்து விளக்கு ஏற்றி வந்தார். ஒருநாள் எண்ணெய்க் கடைக்காரர்களெல்லாம் சேர்ந்துகொண்டு பாபாவு க்கு எண்ணெய் இல்லையென்று சொல்லிவிடவேண்டும் என்று முடிவுசெய்து, எண்ணெய் வைத்துக்கொண்டிருந்த போதிலும் கொஞ்சங்கூட இல்லையென்று சொல்லிவிட்டார்கள். பாபா பதில் ஒன்றும் சொல்லாமல் நேரே மசூதிக்கு வந்தார் தினமும் எண் ணெய் வாங்கும் காலித்தகரம் நிறைய குளிர்ந்த ஜலம் விட்டு அதைக் கலக்கி பூராவும் தான் உட்கொண்டார். பிறகு விளக்கு கள் எல்லாவற்றிற்கும் வேறு ஜலம் விட்டு நூல்திரிபோட்டு தீபம் ஏற்றினார். என்ன ஆச்சர்யம்! தீபங்களெல்லாம் சுத்தமான என் ணெய்விட்டுஎரிவதுபோல் அன்று இரவுபூராவும் எரிந்தன. வேடி க்கை பார்க்கவந்த எண்ணெய்க் கடைக்காரர்கள் மிகவும் வெட் கித்து, பாபாவின் காலில் விழுந்து, மன்னிப்புக் கோரினார்கள். பாபாவும் அவர்கள் இனி ஒருபொழுதும் பொய்சொல்லக்கூடா தென்று நல்வழிப்படுத்தினார். இதைக்கண்ட அவ்வூர் ஜனங்க ளும் பாபாவினிடம் பக்தியுடன் பழக ஆரம்பித்தார்கள்.

ஸ்ரீ ஸாயிபாபா சீரடியில் சுமார் 60 வருடம் தங்கியிருந்தார். பலஜனங்களுக்கு கொடிய ரோக நிவிர்த்திகளும், பல அரிய உத விகளும் செய்து தன்னை நாடிவந்த அன்பர்களுக்கு உபதேசமொ ழிகளும் கூறியிருக்கிறார்!



குரல். (சாது ஸ்ரீ முருகதாஸ்.)

"குருவே தருவே உருவாய் வந்த
அருவே கருவே ரறுக்கும் திருவே"

நான் நாடுகள் சுற்றுகின்றேன். எத்தனையோவிதமான மனிதர், மிருகம், தாவரமாகிய ஜீவன்களைக் காண்கின்றேன். எப் படியோ எல்லாம் வாழ்கின்றன.

ஒன்றையொன்று குறைகூறியோ அல்லது புகழ்ந்தோ வாழ் கின்றன ஜீவன்கள். ஒன்றும் அழிவை விரும்புவதில்லை. ஆனால், அதன் விருப்பமின்றியே உலகைவிட்டுப் பிரிக்கப்படுகிறது. எங் குபார்த்தாலும் பராக்கிரமம் பொருந்திய ஏதோ ஒரு சக்தியின் ஆடலாக உணரப்படுகிறது.

ஒன்றும் கட்டுப்படுத்தமுடியாதபடி எல்லாவற்றையும் தன் எல்லைக்குள் கட்டிவைத்து ஆட்டுகிறது இப்பெரும் சக்தி.

---

முற்பக்கத்தொடர்ச்சி.

கடைசியாக, ஸ்ரீஸாயி பாபா 15-10-1918, ஏகாதசி புண்ய தினத்தன்று சீரடியில் மஹாஸமாதி அடைந்தார். சமாதி அடை ந்து, இன்றும் பூரண சரணாகதியடைந்தவர்களுக்கு நினைத்த மாத்திரத்தில் அவரவர்களுடைய குறைதீர்த்து ஸ்ரீ ஸாயிநாதன் அனுக்கிரகம் செய்துகொண்டுவருகிறார். அவரிடம் பூரண அன் புவைத்த பக்தர்களும் அவர் இன்றும் அவரவர்கள் பூஜித்து வரும் இஷ்டதேவதையின் ரூபமாகவே காக்ஷியளித்துவருகிறார் சீரடியில் அவர் ஜீவியகாலத்தில் தானே ராமன், கணபதி என்று பலபேர்களில் தோன்றி கடவுள் என்பது ஒன்று என்று காட்டி யிருக்கிறார்,

ஸ்ரீ சாயிநாதருக்குகந்த விசேஷ தினங்கள்.

1 ஸ்ரீராமநவமி உத்ஸவம். [பது.
2 ஆஷாட சுத்த பௌர்ணமி. (ஆடி) அதுதான் குருபூஜையென்
3 மஹாசமாதிவிழா (தசராவில்வரும் ஏகாதசிதிதி.)

ஓரறிவுமுதல் ஆறறிவுவரையுள்ள எல்லா ஜீவன்களையும் இச் சக்தி தன்னிஷ்டப்படி ஆட்டுகிறதே! இதை அடக்கியாள முடியாதா? என்ற கேள்வி எழுந்தது.

"முடியும்" என்றது ஓர் இனிமையான குரல்!

"எப்படி"? என்றேன்.

குரல்: கேளப்பா:

"அன்பென்னும் பிடியுள் அகப்படும் மலை,
அன்பென்னும் கடத்துள் அடைபடும் கடல்"

தெரியுமா! இதுதான் முன்சொன்ன சக்தியைக்கட்டுப் படுத்தும் மந்திரம். கடலும், மலையும், துளியும், தூசாகவும் மாறிவிடும். அன்பே வலிய சக்தி அன்புகொள்; உனக்கு எல்லாம் விளங்கும்!

"அதன் ஆடல் என்ன"?

குரல்: இன்பமே அதன் ஆடல்!

"எல்லாம் துன்பமாகக் காணக் காரணமென்ன"?

குரல்: அதுவா! எல்லாம் வல்ல சக்தியின் ஆடல், 'இன்பமேதா வல்லது' என்பதை மறந்த மதியீனத்தால்!

"இம்மறதிக்குக் காரணம்"?

குரல்: அப்படிக்கேளடா! நான், எனது, என்று சுயநலத்தின் குரலைப் பின்பற்றி, புகழ், பதவி, முதலிய பெற்று நீண்டு வாழ நினைத்தாய்! நலமான அவளாடலும், அன்பு சக்தியும் மறந்துவிட்டது!

"இதுவும் அச்சக்தியின் ஆடல்தானே? நான் எப்படிக் குற்றவாளி"?

குரல்: ஏ! பேசப் படித்த பண்டிதா! இக்கேள்வியை என்னைக் கேட்காதே; உன்னையே கேட்டுக்கொள்! உன் உள் நிலையைப் பார்த்துக்கேள்! பேச்சு, கேள்வி, அபிமானம் அனைத்தும் அழியும்; அன்பு வளரும்! இன்பம் பெருகும்; கட்டுப்படாத பராசக்தியும் கட்டுப்படும்!



உலக ஜீவராசிகளை ஆட்டிவரும் சக்தியாய் நிற்கும் ஒன்று உன் அன்பு சக்தியுள், தன்னையிழக்கும்.

"அன்பெனும் பாசத்தால் கட்டுண்டு
அன்பர்கள் உள்ளக்குகை வாழுமே"

என்பது சத்தியமாகும். தொல்லையும் துக்கமும் மறையும். எங்கும் அன்னைவடிவாக அதே சக்தி அருள் காட்சிதரும். ஆசாபாசப் பேயையொழிக்கும். இளமையுள்ளமும், புன்சிரிப்புநிறை முகமும், ஆரோக்கியமும் குறையாது தரும். சித்திகளும், சொர்க்கப்பதங்களும் உன் தாள் பணிவதால் புனிதமடையும். பயப்படாதே! வா!! என்றது கருணைக்குரல்.

அன்பு உள்ளத்தேகொள்; மன ஓட்டமும் இந்திரிய ஆட்டங்களும் அற்றுப்போகும். எல்லாவற்றையும் ஆட்டி, ஆண்டு, அழித்து, படைத்து ஒன்றுசேர்க்கும் மூலசக்தி உனக்குக் காவலாகவும், ஏவலாகவும் நிற்கும். எல்லா நாவும், மனமும், வாழ்த்தும் நலமாகும். வாழ்வுபெறலாம். என்னையும், என்சொல்லையும் நம்பு! பயப்படாதே!! என்றது அன்புநிறைந்த குரல்.

எல்லாம் என்மயம்! என் இச்சையே அச்சக்தியின் ஆடலையும் உலக தத்துவங்களையும் காட்ட வல்லது. நானும் அதுவும் ஒன்று. நான் உரு! அது அரு!. அன்புகொள்! சேவைசெய்!! பலனைத்தியாகம்செய்!!! நீ கண்டும், கேட்டும், விரும்பியும் அனுபவிக்கமுடியாத அப்பராபரசக்தியின் அருட்குழந்தைகளே உலக ஜீவர்கள் என்றுணர்ந்து வணங்கு. பேதங்களை ஒழி. எல்லாம் அச்சக்தியின் மூலமே. முன்னேறிவா. சுயநலத்திரைக்குள் மறையாதே. மாயை என்பது கண்டு "பயப்படாதே நான் இருக்கிறேன்." என்றது இன்பக்குரல். "குரல் வந்த திக்கை நோக்கினேன்.

உருவம் ஒன்று கண்டேன்! தலையிற் சிலையும், குங்குமப் பொட்டு நெற்றியும், சிறிது வளர்ந்த நரைத்ததாடியும், பார்ப்பவர் மனம் அமைதி பெறும் ஒளிநிறைந்த முகமும் கண்டேன்! கைகளில் ஒன்று "நானிருக்க பயமேன்" என்ற சின்னத்தைக்காட்டி என்னை அழைக்கப்பார்த்தேன்!! குரல், உருவம், உடையலங்கா

ரம், முதலிய கவனித்தேன்! சீரடியின் ஸாயிபாபா என்று உலகம் போற்றும் குருநாதர் இவரே! என்று உணர்ந்தேன். மகிழ்ந்தேன்! அவர்முன் அமர்ந்தேன்!! ஆறுதல் அடைந்தேன்!!! எல்லாமற என்னையிழந்த சிவம் பெற்றேன்!!!

குரல் உள்ளத்துள்ளே ஒலித்துக்கொண்டேயிருக்கிறது.

உரு மறைந்தது. அவருடைய உருவை அழகாக அமைத்து குரலை அதற்குக் கொடுத்துக்கேட்டு மகிழ்கிறார்கள் அடியார்கள். பலர் பாடி பஜனை செய்கிறார்கள். ஒவ்வொருவருடைய நாக்கினின்றும் அவர் குரல் ஒலிக்கிறது.

(அடியாரின் குரல்)

ராகம் ஆனந்தபைரவி] [தாளம் ரூபகம்

பல்லவி.

என்னென்று சொல்வேனடி—என் ஸாயி மகிமை (என்)

அனுபல்லவி.

தொல்லுலகில் நரக அல்லல் பட்டுழலாமல்
எல்லையில்லா இன்பம் என்றும் தருவானடி (என்)

சரணம்

1 அன்னையும் அப்பனடி அன்புள்ள தோழனடி
தன்னிகரில்லையெனத் தாங்கிடும் தெய்வமடி
உன்னிப் பார்த்திடிலோ ஓங்காரத்தத்துவன்டி
அன்னைபராசக்தி அற்புத பாலனடி (என்)

2 எல்லோரும் ஓர்குலம் எல்லோரும் ஓர்மதம்
என்றே பறை சாற்றிய என்குருநாதனடி
வஞ்சனை மாந்தர்களும் நெஞ்சமதில் நினைத்தால்
அஞ்சேல்! அஞ்சேலென அபயமளித்து ஆதரிப்பவனடி (எ)
(By S. K. N.)

என்று தனக்குக் குருவளித்த குணத்தைப்பாடி, கூத்தாடுகிறார்கள். நானும் என்னை மறந்து அக்குரல் கொடுத்த உரு அளித்த இன்பத்தை இதோ என் குரல்கொண்டு அறிந்தவரை சொல்கிறேன்.



பாட்டு.

1 ஆயாய் எடுத்தே அணைப்பாய் அம்மா
அத்தனும் ஆன அன்பே குருவே!
நோயாய் வருமா ஆசைபோக்கி
ஞானந்தருவாய் நல்லாருறவே!!
சேயாய் இமையோர் வணங்க என்றும்
செம்மை நிலையில் வைத்தாய் இன்றே!!
நீயாய் என்னைக் காண்பா யென்ற
நீதா ஸாயி பாபா சரணம்!!

2 சரணம் என்றார் மனந்தேறிடவே
சரணந்தந்தே துணைநானென்பாய்!
கரணம் பத்தும் கழல்நாடிடவே
கருணைகாட்டும் ஞான வொளியே!!
மரணம் அற்றேன் புகழால் கருத்தால்
மாயை வென்றேன் எங்கும் என்றும்!
தரணம் தர நான் பயமேன் எனவே
தாவி அணைக்கும் ஸாயி பாபா!!

எல்லாக்கொடுமைகளும் நீங்க குருநாதனைப் பணியவேண்டும். அழகும் பொழியும் அவன் அன்புக்குரலைக்கேட்டு அதன்படி நடக்கவேண்டும். அன்பு, அமைதி, ஆனந்தம் இம்மூன்றும் கலந்த பேரின்ப சக்தியால் பேரின்பம் பெருக்கெடுக்கும். இப்பேரின்ப சக்தியால் உலகப்போக்கை மாற்றி, இதனுள் மூழ்கடித்து, என்றும் இருந்து வாழமுடியும்! என்றுணர்ந்தேன்.

இப்பொழுது நான் ஆனந்தன்!!!

முன்மாதிரியே சுற்றுகிறேன். அதன் ஆடலையும், அதைக் கட்டும் வகையையும், உலகோருக்கு அறிவிக்க அப்பராசக்தி என்னைச் சுற்றவைக்கிறது.

நான் நாடுகள் சுற்றுகின்றேன்!!!

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி.

# ஸ்ரீ சாயி பாபாவின் பொன் மொழிகள்.

1 சீரடி ஆச்சிரமத்தை எவன் மிதிக்கிறானோ அவனுடைய துன்பங்கள் ஒரு முடிவடைந்து சௌகரியத்தை அடைகிறான்.

2 என் ஆச்சிரமத்தின் படியை மிதித்தமாத்திரத்தில், பெருந்துன்பங்களுக்குள்ளானவர்களும் நன்மையும் அடைவார்கள்.

3 நான் இப்பூதசரீரத்தை விட்டபிறகும் மிகச் சுறுசுறுப்பாகவும் தீவிரமாகவும் எப்பொழுதும் வேலைசெய்வேன்.

4 என் சமாதி, என் பக்தர்களுக்கு வேண்டிய ஆசீர்வாதங்களையும் புத்திமதிகளையும் கொடுக்கும்.

5 என் சமாதியிலிருந்தும், நான் ஊக்கத்துடனும், தீவிரமாகவும், சுறுசுறுப்பாகவும், அதிகசக்தியுடனும் லீலைகள் புரிவேன்.

6 என்னுடைய பூத உடலின் சின்னங்கள் என் சமாதியிலிருந்து உங்கள் தேவைக்குப் பேசிக்கொண்டிருக்கும்.

7 என்னையே ஒருவன் தஞ்சமாகச்செய்துகொள்பவனுக்கும், என்னிடம் வருபவனுக்கும், என்னிடம் தீவிர நம்பிக்கை உள்ளவனுக்கும், உள்ளன்போடு என்னைக்கூப்பிட்டவுடன், என்னை நினைத்தமாத்திரத்திலேயே, பிரத்தியக்ஷமாகிறேன். எந்த ரூபத்திலும், எவ்விடத்திலும் நான் உயிருடன் இருப்பேன்.

8 நீ என்னை அடைந்தால் நான் உன்னை கடாக்ஷிக்கிறேன்.

9 நீ என்பேரில் உன் பளுவைச் சுமத்தினால் நான் நிச்சயமாக அதைத் தாங்குவேன்.

10 நீ என் உபதேசத்திற்காகவும் உதவிக்காகவும் என்னை அடைந்தால் அவைகளை உடனே நான் உனக்குக் கொடுப்பேன்.

11 என்னுடைய பக்தர்களுடைய வீட்டில் ஒருபோதும் தேவை என்பதே இருக்காது.



முற்றொடர்ச்சி.

# 'தொழுவார் தங்கள் துயர் தீர்ப்பாய்.'

(பிரமசாரி சோமசுந்தரம்)

சகல இன்பத்துக்கும் மூலமாய் இருக்கும் பகவானை தூரத் தள்ளிவிட்டு, அநித்தியமான சில அற்பவிஷயங்களையெல்லாம் தந்து தம்மை மறக்கச் செய்திருக்கிறார்; அவரைக் கூப்பிடுங்கள். அவர் ஓடிவந்து உங்களை இடுப்பில் வைத்துக்கொள்வார். விளையாட்டுச் சாமானை நாடினால் விளையாட்டுச்சாமான் கிடைக்கும்; அவரை நாடுவீர்களாயின் அவரை அடைவீர்கள். ஒன்றுவேண்டுமென்றால் மற்றொன்றை விடவேண்டும்! ஆகலின் ஏனைச் சிற்றின்பங்களைப் பெறுவதிற் கருத்தூன்றல் ஒழித்து, நிலையான கடவுளின் பேரின்பத்தைப் பெறுகவென அறிவுறுத்துவதாயின.

உண்மையை உள்ளபடி அறியவொட்டாது மறைப்பது மாயை என்றும் மலம் என்றும் அவித்தை அஞ்ஞானம் என்றும் கூறப்படும். உடல், இந்திரியம், மனம், பிராணன் எல்லாம் மாயையினால் கட்டுப்பட்டு இழிநிலையடைந்து இடங்கெட்டுப் போகின்றன.

"விறகில் தீயினன் பாலிற்படு நெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல்நட் டுணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே"

விறகிலுள்ள தீயும் பாலிலுள்ள நெய்யும் மணியிலுள்ளசோதியும் வெளியில் தோன்றாது மறைந்து நிற்பதுபோல, இறைவன் நமது கண்ணுக்குத்தோன்றாமல் மறைந்திருக்கின்றான் என்கின்றார் திருநாவுக்கரசர். இறைவனிடத்து உறவு (பக்தி) என்னும் கோலை நட்டு, உணர்வு (விவேகம்) என்னும் கயிற்றினால் நன்றாக இழுத்துக் கடைந்தால் (அவ்வாறு கடைபவர்க்கு) அவன் எதிரே வெளிப்பட்டு நிற்பான். விறகில் உள்ள தீ 'முறுகவாங்கிக்கடைய முன்னிற்கும்', அதுபோல தாமத குணமுள்ளவர்க்கு இறைவன் மிக்க பிரயாசைப்பட்டுத் தம் மனத்தே பக்தியை நிலைநாட்டித் தீவிரமாக விவேகத்தால் உண்மைப் பொருளை மீண்டும் மீண்டும்

சிந்திப்பதன் பயனாக விளங்குவான். பாலில் உள்ள நெய் 'வாங்கிக் கடைய முன்னிற்கும்', அதுபோல், இராஜஸ குணமுள்ளவர்க்கு இறைவன் அவ்வளவு பிரையாசையின்றிப் பக்தியோடும் விவேகத்தால் மீண்டும் சிந்திப்பதால் விளங்குவான். மணியிலுள்ள சோதி 'கடைய முன்னிற்கும்', அதுபோல் சத்துவ குணமுள்ளவர்க்குச் சிறிது முயற்சியோடு தியானித்த உடனே பக்தியால் விளையும் விவேகத்தினால் அவன் தோன்றுவான்.

புகையினால் அக்கினியும், அழுக்கினால் கண்ணாடியும், கருப்பையினால் கருவும் மறைக்கப்படுவதுபோல் உண்மைப் பொருள் மறைக்கப்படுகிறது.

மாயையிற் கட்டுண்ட மனிதர்க்கு இவ்வுலகில் பிறப்பதும், பிறந்தபின் வாழ்வதும் கொடிய துன்பம் நிறைந்ததென்பதை அறியமுடிவதில்லை. மனித ஜன்மம் எடுத்துங்கூட இந்த அரிய ஜென்மத்தின் உத்தேசம் இன்னதென்பதை, முற்றிலும் மறந்தவனாய் இருக்கின்றான் 'புத்திக்கு மயக்கத்தைத் தரும் துன்பத்திரை மறைப்பதினாலே மெய்ஞ்ஞானம் என்னும் உண்மைப்பொருளை அறிவிக்கும் அகக்கண்ணை இழந்து உலகத்திலே போக்கியமான பொய்ப்பொருள்களை விரும்பி சிறந்த புகலிடத்தைக் கைவிட்ட குருடர்கள்' என்று ஒரு பாசுரத்தில் திருநாவுக்கரசர் குறிப்பிடுகிறார்.

"இருள்தரு துன்பப்படல மறைப்பமெய்ஞ் ஞானமென்னும்
பொருள்தரு கண்ணிழந்(து) உண்பொருள் நாடிப் புகலிழந்த
குருடரும்"
(திருநாவுக்கரசர்)

"ஊனத்திருள் நீங்கிட வேண்டில்
ஞானப் பொருள் கொண்டடி பேணும்."

என சம்பந்தர் திருவாய்மலர்ந்துளார். ஆதலின் இக்குறுகிய வாழ்க்கையில் குறுகாத இன்பத்தையடைதற்குரிய வழியைத் தேடி வைத்துக்கோடல் வேண்டும். புவியில் நிமிஷத்தில் தோன்றிமறையும் நிலையில்லா வாழ்வுக்குரிய செய்கைகளுக்குப் பகவத் கடாக்ஷம் வேண்டுமென்றுதயங்கித் தவிக்காமல், அதனால் ஜீவனுக்கு யாதொரு சுகமில்லையென்று தெளிவுகொண்டு நிலையாக உள்ள பகவத் கருணையைப் பெற முயற்சிசெய்வது அழகல்லவா?



உண்மையான சுகத்தை அனுபவிக்க விரும்புகிறவன் மனத்தைச் சுத்திசெய்துகொள்ளவேண்டும். கண்வலி நீங்கவேண்டுமென்றால் கண்ணாடியில் மருந்தைக்கொட்டினால் போதாது. இப்புவியில் பதவி பட்டம் ஒன்றும் விரும்பாமல் சிவானந்தம் ஒன்றே தந்தால் போதும் என்று எவனொருவன் மனத்தை உலக விஷயங்களில் செலுத்தாமல் உட்புறமாகத் திருப்பி, பரமாத்மாவை நோக்கச்செய்து பிரமானந்தத்தை அனுபவிக்கின்றானோ அவனைக் காட்டிலும் பாக்கியசாலி எவனுமில்லை.

"காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணி இலிங்கமாக
நேயமே நெய்யும்பாலா நிறையநீரமைய ஆட்டிப்
பூசனை ஈசனார்க்குப் போற்றவிக் காட்டினோமே"
(திருநாவுக்கரசர்.)

உடம்பே கோவிலாகவும், (புலன்களின் வழிப்படாது) காக்கப்படுகிறமனம் (கோவில் தொண்டுகள் செய்யும்) அடிமையாகவும், வாய்மையே (கோவிலின்) பரிசுத்தமாகவும், (அப்பரிசுத்தம் பெற்ற) மனத்திலுள்ள ஒளியே அழகிய இலிங்கமாகவும் (கொண்டு), அன்பே (பக்தியே) நெய்யும் பாலுமாக நன்கு நிறைய அபிஷேகம் செய்து துதியை உணவாக்கி, ஈசனுக்குப் பூசனைசெய்யும் முறையைக் காட்டினோம்.

நாம் இவ்வுலகில் நல்ல வாழ்வு நடாத்துதற்கும், உயிர்வாழ்வடைவதற்கும், தம் உடம்பையும் புலன்களையும் தம் வயப்படுத்தியிருப்போர்க்கு அவை உகந்த சிநேகிதர்களாயிருக்கின்றன. அங்ஙனம் அடக்காதவர்களுக்கு அவை விரோதிகள்போல இருக்கின்றன. செவி, கண், மெய் முதலிய ஐம்புலன்களுக்கும் இனிமையைத்தருவனவாக உலகத்தார் கருதும் எப்பொருளிலும் மிக்க இன்பம் தருவது இறைவன் திருவடி நிழல். ஆதலின் அப்பேரின்பத்தை இடைவிடாது அநுபவிப்பவர்க்கு உலகத்துன்பம் எதுவும் தோன்றாது என்றும் இவ்வுண்மையை "மாசில் வீணையும் மாலை மதியமும்" என்ற பாசுரத்தில் எடுத்துக்காட்டியுள்ளார் அப்பர் சுவாமிகள்.

(தொடரும்.)

# இறைவனுள்ள இடம்.

(அறிஞர் வாஸ் வானியின் மொழிகள்.)

(தென்னாப்பிரிக்கா டர்பன் திரு. ச. மு. பிள்ளை அவர்கள்.)

இன்று உலகில் நாம் காணும் முக்கியமான மாறுதல்கள் மூன்று. மனச்சாட்சியை நம் முன்னோர்கள் பிரதானமாகக் கருதி மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் கருமங்கள் செய்யவேண்டுமென்று கருதினார்கள்.

நவீன காலத்திலே, மனச்சாட்சிக்குப் பதிலாக தங்கள்மனதிலே உதிக்கும் எண்ணங்களையே பெரிதாகக்கொண்டு அவற்றைப் பின்பற்றுகின்றனர். இது முதல் மாறுதல்.

## விஞ்ஞானமே மேன்மை.

நம் முன்னோர்கள் சமயாசாரங்களை வாழ்க்கையில் வழிகாட்டியாகக் கருதினார்கள். நவீனர்கள், விஞ்ஞான சாஸ்திரத்தை வழிகாட்டியாகக் கருதுகின்றனர்.

மக்கள் செய்யும் கருமங்களெல்லாம் கண்ணுக்குத் தெரியாத மோட்ச பலனை உத்தேசித்ததாக இருந்தன. நவீன மக்களுக்கு அதில் நம்பிக்கை போய்விட்டது. பிரத்தியட்ச பலனிலேதான் நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது.

இவ்வாறு ஏற்பட்டிருக்கும் மாறுதல்களுக்கு நம்முடைய பண்டைக் காலத்து சமயாசாரங்களும், தத்துவங்களும் ஜவாப் சொல்லுமா? அவ்வளவு சக்தி அவற்றிற்கு இருக்கின்றனவா என்னும் கேள்விகளுக்கு நான் வெகு வணக்கத்துடனும், அழுத்தமாகவும் ‘முடியும்’ என்று சொல்லத்தயார்.

உலகத்தில் நாளுக்குநாள் வாலிபர்களின் மனதிலே கடவுள் ஒருவர் இருக்கிறாரோ என்னும் சந்தேக எண்ணம் வளர்ந்து வருகின்றது உண்மைதான். ஆனால், விஞ்ஞான நிபுணர்களின் மனதிலே, கடவுள் இருக்கத்தான் இருக்கிறார் என்னும் எண்ணமும் தினை தினை வளர்ந்து ஊர்ஜிதப்படுவதையும் நாம் கவனிக்கவேண்டும்.



விஞ்ஞான சாஸ்திரங்களெல்லாம் சமய சமயசாஸ்திரங்களுக்குப் போட்டியாகத் தோன்றியவை யென்றும், அவை இரண்டும் வாதப் பிரதிவாதம் செய்யும் போட்டி சாஸ்திரங்களென்றும் நினைப்பது மிகத் தவறு. விஞ்ஞான சாஸ்திரங்களைப்போலவே, சமய சாஸ்திரங்களும் ஒன்றென்று கருதவேண்டும். ஏனெனில் விஞ்ஞான சாஸ்திரங்கள் இயற்கையைக் குறித்து கூறுவதுபோலவே சமய சாஸ்திரங்கள் வாழ்க்கை முறையைக் குறித்து கூறும் சாஸ்திரங்கள். ஆகவே, இரண்டும் இருவித சாத்திரங்களேயாகும்.

உலகத்திலுள்ள சர்வ மதங்களும் உபதேசிக்கும் முதல் தத்துவம் என்னவெனில் ‘சத்தியமாக இரு’ என்பதுதான். இன்று நவீன உலகம் எந்த நிலையில் இருக்கிறதென்று பாருங்கள். உலகெங்கும் அரசியல் சுதந்திர கோஷம் வானைப் பிளக்கின்றது ஆனால், சத்தியமில்லாமல் போனால் உண்மையான சுதந்திரம் நிலைக்க முடியாதென்று, ஜீவதத்துவத்தை கோஷமிடுகிறவர்களில் பெரும்பான்மையோர் உணரவில்லை.

இன்று உலகத்தில் ஒவ்வொரு தேசத்திலும் ராஜ்ய பரிபாலனம் எவ்வாறு நடக்கின்றது என்பதை கவனியுங்கள். ''ராசதந்திரம்'' என்னும் முறையை பிரதானமாகக் கொண்டுதான் உலகெங்கும் நிர்வாகம் நடக்கின்றது. ஒவ்வொரு தேசத்து சர்க்காரும் ரகசியமாக சூழ்ச்சிகள் செய்கின்றனர். உலகம் இந்த நிலைமைக்கு வந்துவிட்டது!

உலக மக்கள் அனைவரும் சத்தியத்தை மூச்சாகக்கொண்டு வாழ்க்கையை நடத்த முற்படுவார்களாகில், இன்று புதைந்து மண்மேடிட்டு மறைந்து போகக்கூடிய நிலைமையில் இருக்கும் நம் நாகரீகம் ஜீவன் பெற்று நடமாடத் தொடங்கும்.

உலகத்திலுள்ள மதங்களெல்லாம் ஒரே சத்தியத்தை போதிக்கிறதென்பது உண்மையாயின், ஏன் இத்தனை மதங்கள் இருக்க வேண்டும் என்று அவர்கள் கேட்டார்கள். நான் அவர்களை பதி

னுக்கு சில கேள்விகள் கேட்கிறேன். சிந்தித்துப் பார்க்கட்டும் பூந்தோட்டத்தில் இவ்வளவு வகையான புஷ்பங்கள் ஏன் இருக்கின்றன.

### பல மதங்கள் ஏன்?

சங்கீதத்தில் ஒரே ஒரு ஸ்வரம் இருந்தால் போதாதா? ஏன் பல ஸ்வரங்கள் இருக்கின்றன? அவ்வளவு ஸ்வரங்கள் இல்லாமல் போனால் ராகம் பாடமுடியாது.

அதுபோலவே ஒவ்வொரு மதமும் ஒரு சங்கீத ஸ்வரத்திற்கும் சமானம. அவைகளனைத்தும் சேர்ந்து சேர்ந்து ஆத்மாவுக்கு இனிய சங்கீதம் பாடுகின்றன.

ஆகவே, சன்மார்க்க வாழ்க்கைதான் மதம் என்பதை அறியுங்கள். சன்மார்க்க வாழ்க்கை தத்துவத்தை உபதேசிப்பது தான் மதோபதேசமாகும்.

ஜபமணியை உருட்டுவதில் இல்லை மதம். சங்கீதங்கள் பாடுவதிலும் இல்லை. வைதிக கருமங்களும் மதமன்று.

ஏழை மக்கள் கூடும் சந்தைகளிலே இறைவன் இருக்கிறார். ஏழைகளின் குடிசைகளிலே இறைவன் இருக்கிறார். இங்கு இறைவனைத் தரிசிக்காதவர்கள் ஆலயங்களில் தரிசிக்க முடியாது.

புதிய வேதம் ஒன்று இருப்பதைப் பாருங்கள், மக்கள் சமுதாயத்திலே ஏழைகளை வணங்கி பணி செய்யுங்கள். அந்த ஏழை மக்களின் உடைந்த உள்ளத்திலே ஆண்டவனைக் கண்டு தரிசியுங்கள்.

---

### சுவாமி சிவானந்தரின் பொன்னுரைகள்.

கடவுள் உண்டு, உன்னுள்ளே கடவுள் இருக்கிறார். சாந்தம், ஆத்மா, பிரம்மம், கடவுள் சுதந்தரம், அமரத்தன்மை, முக்தி, எல்லாம் ஒருபொருட்சொற்கள்.

எப்போதும் கடவுளைத் தியானித்தால் தீமைக்கே இடமிராது.

தொல்லை மோதும் போது நாத்திகன் கூடக் கடவுளை நினைக்கிறான்



312ம் பக்கத் தொடர்ச்சி

# ஆத்மசித்திக்கான சாதனங்கள்,

(ஸ்ரீசுந்தரம்மாள் ராகவாச்சாரி)

மேற்கூறிய பல காரணங்களைப்பற்றி மக்கள் அனாவசியமான கவலையுற்றுப் பயமடைந்து உண்மையில் ஏற்படக்கூடாத துன்பங்கள் ஏற்படப்போவதாகவும், ஏற்பட்டுவிட்டதாயும், மனதில் தப்பான உண்மைச் சக்தி எழும்பும்படி செய்துகொள்வது விசனிக்கத்தக்கது. இத்தகைய மனப்பான்மைக்கு இடங்கொடாது, ஏன் எப்படி எப்பொழுது, சில குறைபாடுகள் உண்டாகின்றன என்பதன் உண்மைகளையுணர்ந்தால் மட்டுமே ஆத்மசித்தி, அடைவது சாத்தியம். மூன்று உண்மைத் தத்துவங்களை மக்கள் அறிந்தால் மட்டில் அஞ்சாமை என்ற பேருணர்ச்சி மலர்ந்து விளங்கும்.

முதலாவதாக, மேலே கண்ட அபாயநிலைகளும் விபத்துகளும் மக்கள் தாமே நாடி இயற்றிக்கொள்பவையாதலால், தாம் அவைகளை பொருட்படுத்தாது நடந்தால் அவை மக்களை அணுக மாட்டா.

இரண்டாவதாக, தன்னையும் மீறி ஒரு அபாயநிலையோ, விபத்தோ நேருவதாயிருந்தால் அதைக்கண்டு உடல் நொந்து பயத்தினால் மனங்குன்றி தளர்ச்சியடையாமல், நேராகவும், ஊக்கத்துடனும் அதை எதிர்த்துத் தவிர்க்க முயலவேண்டும். அதுவே மனோதிடம் என்பது.

மூன்றாவது, தவிர்க்கமுடியாத விபத்து நேர்ந்தால் அதினின்று தப்பி ஓட முயல்வதைப்போன்ற மதியீனம் வேறு எதுவுமில்லை. அதை நிமிர்ந்து நின்று வரவேற்று அதனால் ஏற்படக்கூடிய தீயபயன்களை ஒருவாறு குறைத்துக்கொள்ள முயல்வதே அஞ்சாமையின் முக்கிய அம்சம். (அஞ்ஞானம்) அறிவின்மையினின்றும் உண்டாவது அச்சம் என்று சொன்னோம். அறிவின்மைக்குக் காரணம் சுயநலம் பாராட்டல் உலகமக்களிடத்தும் ஜீவப்பிராணிகளிடத்தும் பரிபூரணமான அன்பு உண்டானால் அச்சம் பறந்துபோம். "Perfect Love Casteth out fear" சுயநலப்பா

பாராட்டுதலும் உடன் புறப்பட்டுச்செல்லும். தன் வீடு, தன் மனைவி, தன் மக்கள், தன் சொத்து என்ற எண்ணங்களுக்கு எல்லாம் காரணமான "நான்" "எனது" என்ற அகங்கார, மமகாரங்களும் விலகிநிற்கும். தன் தினசரிக் குடித்தன வாழ்க்கையைக் குறைவின்றி இன்புற நடத்தப் போதிய ஊதியத்துக்கதிகமாக சம்பாதிப்பது அனாவசியம் என்பதையும், பிற்காலச் சந்ததியாருக்குப் பொருளீட்டிவைக்கப் பாடுபடுவது மடமை, மதியீனம் என்பதையும் உணர்ந்தவரே, சாவுக்குப் பயப்படாமல், ஆத்மசொரூபத்தையறிந்து இல்லற வாழ்க்கையை நல்லறத்துடன் நடத்தி நலம்பெறுவர். "வருவன வந்தேதீரும்" "அவனின்றி அணுவும் அசையாது" என்ற மூதுரைகளின் சிறப்பையும், உண்மைப் பொருளையும் அறிதல் அவசியம்.

"வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது வேண்டாமை வேண்டவரும்" என்றார் தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார். அவாவறுத்தலுக்குச் சாதனம் ஆத்மஞானம், ஆத்மசித்திக்குரியசாதனங்களுள் அஞ்சாமையும் முக்கியமானதே.

இடைவிடாது மனக்கலக்கம் உண்டாக்கவல்லவை முன் கூறிய அச்சமேற்படச்செய்யும் காரணங்கள். அஞ்ஞானம்தான் அச்சமுறுவதற்கு முக்கிய காரணம். உண்மைத் தத்துவங்களை உணர்ந்து, இது நிஜம், இது பொய், இது நலம்பயப்பது, இது தீமைவிளைவிப்பது என்ற பாகுபாட்டுடன், ஒவ்வொரு விஷயத்தையும் சோதித்து நமது தினசரி வாழ்க்கையை நடத்தத்தெரியாமற் போனாலே அச்சம் உண்டாதல் இயல்பு. பேய், பிசாசு, மாயாரூபம், பூதம் என்று பல பெயர்களால் அழைக்கப்பெறும் நிலையற்ற உயிரற்ற ஒரு உரு இருப்பதாகவும், தீமைவிளைவிக்க வல்லது என்றும் மதித்து நாம் திகில் அடைகிறோம். ஆனால் உண்மையில் அவ்வித உருவம் இயற்கையில் இல்லை. ஆகவே மனிதன் தனக்குத் தீமை விளைவித்துத் துன்புறுத்த வல்லவை எனப் பல பொய்ப் பொருள்களை மதித்துக் கிலேசமடைகிறான். தற்செயலாக எதிர்பாராது ஏதேனும் ஒரு விபத்து நேர்ந்துவிடத்து அது பேய், பிசாசுகளின் சூழ்ச்சியால் உண்டானது என்று பிசகான எண்ணத்துடன் வெருட்சியால் கிலேசமடைகிறான்.

(தொடரும்.)



# செய்தித்திரட்டு.

## காந்தி ஜயந்தி. (2.10-50.)

கொக்குவில் ஸ்ரீ ராமக்கிருஷ்ண சைவவித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்றது. பிரார்த்தனையின்பின் நூல்நூற்றல் போட்டி ஒன்றும் நடைபெற்றது. பின்னர் திருவாளர்கள் இ. கந்தையா, சி. குலரத்தினம், செ. துரைசிங்கம், அ. ஆறுமுகம், அ. கனகசபை ஆகியோர் பேசினர்.

நாவலப்பிட்டி கதிரேசன் கல்லூரி மாணவர்களால் கொண்டாடப்பட்டது. பிரார்த்தனையின்பின் மாணவர்கள் காந்திப்பாடல்களும் காந்தியைப்பற்றிய பேச்சுக்களும் நிகழ்த்தினர். பின்னர் ஆசிரியர்கள் ஆறுமுகம், பொன்னுத்துரை, அத்தநாயக்கா என்போர் பேசினர்.

கண்டிச் சைவமகாசபை ஆதரவில் கொண்டாடப்பட்டது. பிரார்த்தனையின் பின் திரு. வைத்திலிங்கம் அவர்கள் காந்தீயம் என்பதுபற்றிப் பேசினார்கள். ஈற்றில் செல்வி அருந்தவம் காசிப்பிள்ளை என்பவர் இசைவிருந்து நடத்தினர்.

ஸ்ரீ ஸாயிபாபா தினம் 28.1-50ல் திருச்சிராப்பள்ளி ஸ்ரீ சாயி மந்திரத்தில் கொண்டாடப்பட்டது. அத்தருணம் சாது ஸ்ரீ முருகதாஸ் அவர்கள் "பேடா ராமன்" என்பதுபற்றி ஓர் சங்கீத உபந்நியாசம் செய்தார்கள்.

குருநாக்கல் சைவமாசபை ஆதரவில் 17-9-50ல் திரு. க. பொன்னுத்துரை அவர்கள் விஞ்ஞானமும் சமையமும் என்பது பற்றிப் பேசினார்கள்.

கூட்டுவழிபாடு. வெள்ளவத்தை ஸ்ரீ மாணிக்கவிநாயகர் ஆலயத்தில் கூட்டுவழிபாடு ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையிலும், கொழும்பு ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி கோயிலில் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையிலும் ஒழுங்காய் நடைபெற்றுவருவது கேட்டு அகமகிழ்கிறோம்.

1-10-50ல் ரோசல்லை குயில்வத்தை சிவாலயத்தில் கூட்டுப் பிரார்த்தனையும் சன்மார்க்கப் பிரசங்கங்களும் நடைபெற்றன.

## யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்

## இயற்றிய

| | | | |
|---|---|---|---|
| பாரதசக்தி மகாகாவியம் | 15 0 | நவரசகடலுஞ்சலி | 3 0 |
| யோகசித்தி மூலமும் உரையும் | 3 0 | சிவானந்தஜோதி | 1 8 |
| | | தேசியகீதம் | 1 8 |
| அருட்செல்வம் | 2 0 | புதுயுகப்பாட்டு | 1 8 |
| இல்லறவொழுக்கம் | 0 4 | பாப்பாபாட்டு | 0 8 |
| அர்ச்சனைமாலை | 0 6 | இதுதான் உலகம் | 8 0 |
| திருக்குறள் இன்பம் | 3 8 | கலைக்கோயில் | 7 8 |
| கவிக்கனவுகள் | 1 8 | ஏழைபடும் பாடு | 5 0 |
| பகவத்கீதை | 1 4 | நாவலர்பெருமான் | 3 0 |
| கீர்த்தனாஞ்சலி | 3 8 | ஸ்ரீ அரவிந்தப்பிரகாசம் | 2 8 |
| சாதனகீதம் | 2 0 | வெரியவாள்கதை | 1 8 |
| ஹரி கீர்த்தனம் | 1 4 | கஸ்தூரி | 0 8 |

இன்னும் அநேக புத்தகங்களும் உண்டு.

☞ தொகையாகவும், சில்லறையாகவும், நேரிலும்,
வி. பி. பி. மூலமும் பெற்றுக்கொள்ளலாம்.
வியாபாரிகளுக்கு தகுந்த கமிஷன் உண்டு.
விபரங்களுக்கு எழுதுக

## இலங்கை சோல் ஏஜென்ஸ்:—

# M. O. MURUGESA PILLAI & Sons,

Printers, Book-Sellers, Stationers, & News Agents,
"SARAVANA" PRESS,
NAWALAPITIYA. (CEYLON.)

பாடசாலைகளுக்குரிய சிங்களம், தமிழ், இங்கிலீஸ்
புத்தகங்களும், உபகரணங்களும் பெற்றுக்கொள்ளலாம்.

சகலவிதமான சிங்களம், தமிழ், இங்கிலீஸ் அச்சுவேலைகள்
சுத்தமாகவும், நயமாகவும், குறித்தநேரத்தில்
செய்துகொடுக்கப்படும்.


சந்தா நேயர்களுக்கு

ஓர்

# விண்ணப்பம்.

எல்லாம் வல்ல ஆதிபராசக்தியின் திருவருளாலும், இன்று
உடல்கொண்டுலாவும் பல மகாத்மாக்களின் ஆசியினாலும் இம்
மாசச் சுடருடன் "ஆத்ம ஜோதி" இரண்டாவது ஆண்டு நிறைவா
கின்றது. இம்மாசச் சுடரில், "நானிருக்கப் பயமேன்" எல்லா
ரும் சாதி சமய வித்தியாசமின்றி என்னிடத்தில் வாருங்கள்
என்ற பாவனையில் மகான் சாயி பாபா அட்டையின் முற்பக்கத்
தை அலங்கரிக்கின்றார்.

தமிழ் அறிந்தோர் யாவர்க்கும் ஆத்மீகத்துறையில் சுத்த
சமரச சன்மார்க்க நெறியைப்பற்றிய விளிப்பையும் எழுச்சியை
யும் தூண்டுதலையே நோக்கமாகக்கொண்டு இரண்டு வருடமும்
அத்துறையில் ஆத்மஜோதி இயன்றளவு தொண்டுபுரிந்தது.

இத்துறையில் எம்முடன் ஒத்துழைத்த கட்டுரையாளர்கள்,
வாசகர்கள் யாவர்க்கும் எமது மனமார்ந்த அன்பும் வணக்கமும்
உரித்தாகுக.

மூன்றும் ஆண்டில் பற்பல புதுச் சிறப்புகளுடனும், கூடிய
பக்கங்களுடனும் "ஆத்ம ஜோதி வளர்ச்சியடையவேண்டுமென்
பது எங்கள் பேரவா. அநேகம் அபிமானிகளும் இதே கருத்தை
எழுதி எமக்கு மகிழ்ச்சியுடன் உற்சாகமும் தந்துள்ளனர். சந்தா
நேயர்கள் ஒவ்வொருவரும் தமது சந்தாவை அனுப்பிவைத்து
இன்னொரு புதிய சந்தாதாரையும் சேர்த்து அனுப்பினால் 32 பக்
கங்கள் கொண்ட ஜோதியை 48 பக்கங்கள் கொண்டதாக வெளி
ப்படுத்தலாம்.

ஆகையால் சந்தாநேயர்கள் அனைவரையும் புது ஆண்டிச் சந்
தாப்பணம் 15-11-50 க்கு முன் "மணி ஓடர், போஸ்டல் ஓடர்"ா
கவோ அல்லது பணமாக நேரிலோ எங்களுக்குக் கிடைக்குமாறு
செய்யும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். இரண்டாம் ஆண்டுச்
சந்தா தரவேண்டிய அன்பர்கள் அதனையும் புது ஆண்டுச் சந்தா
வுடன் சேர்த்து அனுப்புவார்களென அன்புடன் எதிர்பார்க்கி
றோம்.

"ஆத்ம ஜோதி" நிலையம்,
நாவலப்பிட்டி. (சிலோன்).

Registered at the G. P. O as a News Paper


## தாய்தந்த செல்வம்.

முதலிய கட்டுரைகள்
முதற்றொகுப்பு ரூபா ஒன்று.

திருப்புகழ்மணி ஸ்ரீ டீ. எம். கிருஷ்ணசாமி ஐயர்
குங்குமம் காரியாலயம்,
மதராஸ் 10.

## பைந்தமிழ்ச்சோலை.

### யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் இயற்றியது.

"நான் தமிழன்; தமிழர் எனது குழுவினர்; தமிழ்நாடு எனது கோயில்; தமிழரசி எனது தாய்; தமிழ்ப் பணியே எனது மூச்சு; தமிழர் நாமமே எனது சமயம்; என் மந்திரம்; என்தாய் வாழ்க! எங்கெங்கு இருப்பினும் தமிழ்மொழியாளரும் தமிழன்பரும் என் உடன்பிறந்தார்." என்று உணர்ச்சி ஊட்டி.

அன்பீர்! வாரீர், தாய்மொழி பேணுவோம்!
தாய்ப்பணி புரிவோம்! தமிழை உலகமொழியாக்குவோம்!

என்று வீரத் தமிழரைத் தமிழ்த் தொண்டுக்கு அழைக்கின்றார் சுவாமிகள்.

தமிழன் ஒவ்வொருவனும் படித்துப் பயன்பெறத்தக்கது.

விலை அணா 10.

சுத்தானந்த நிலையம், புதுக்கோட்டை.


கௌரவ ஆசிரியர். க. இராமச்சந்திரன்.
பதிப்பாசிரியர்: நா. முத்தையா. 'ஆத்ம ஜோதி' நிலையம், நாவலப்பிட்டி.
[illegible] பிரஸ், நாவலப்பிட்டி 17-10-50.